வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019

## ஆண்டு 5

## மாதிரி வினாக்கள்

Quiz Sample Questions 2019 - Year 5

1. உழவர் திருநாள் எனப்படும் பண்டிகை எது?

**விடை:**

# தைப்பொங்கல்

2. குட்டியீன்று பாலூட்டும் பறவை எது?

1. ஆந்தை
2. மயில்
3. வெளவால்

**<u>விடை:</u>**

# 3. வௌவால்

3. உங்கள் தாயின் இளைய சகோதரியை நீங்கள் எவ்வாறு அழைப்பீர்கள்?

**விடை:**

# சித்தி (சின்னம்மா)

4. கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

“என் அம்மா ஆசிரியராக _________________ செய்கிறார்”.

1. வேழை

2. வேலை

3. வேளை

**விடை:**

2. வேலை

5. மிகக் கூடிய வருடங்கள் உயிர் வாழும் பிராணி (உயிரினம்) எது?

1. முதலை

2. ஆமை

3. தவளை

**<u>விடை:</u>**

2. **ஆமை**

6. வீட்டில் உணவு தயாரிக்கும் அறையை எப்படி அழைப்பார்கள்?

1. முன்னறை

2. சமையலறை

3. சாமியறை

**விடை:**

2. சமையலறை

7. கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

“சூரிய ………… உயிர்களுக்குத் தேவை”.

1. ஒலி
2. ஒளி
3. ஒழி

**விடை:**

2. ஒளி

8. நாய் குரைக்கும் என்பது போல் மயில்

........................?

**<u>விடை:</u>**

# அகவும்

9. கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

“அவுஸ்திரேலியாவின் தேசியக் கொடியில் ஆறு ..................... உள்ளன”.

1. வட்டங்கள்

2. சதுரங்கள்

3. நட்சத்திரங்கள்

**<u>விடை:</u>**

# 3. நட்சத்திரங்கள்

10. நீரிலும் நிலத்திலும் வாழும் ஏதாவது இரண்டு உயிரினங்கள் கூறுக?

**விடை:**

# தவளை

# ஆமை

# (முதலை)

11. இரத்தம் என்ற சொல்லுக்கு ஒத்த பொருள் உடைய சொல் ஒன்று தருக?

1. வியர்வை
2. குருதி
3. ஈரம்

**<u>விடை:</u>**

2. குருதி

12. தந்தைக்கு எதிர்ப்பால் சொல் தாய்.

கணவனுக்கு எதிர்ப்பால் சொல் என்ன?

1. கணவி
2. கணவாய்
3. மனைவி

**விடை:**

3. மனைவி

13. வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1. 1984
2. 1988
3. 1979

**விடை:**

2. 1988

14. தசாவதாரத்தில் எத்தனை அவதாரங்கள் உண்டு?

**விடை:**

# பத்து

15. தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று கூறுக?

**<u>விடை:</u>**

# கிளித்தட்டு

**(போர்த் தேங்காய் அடித்தல், வண்டிச் சவாரி, சடுகுடு)**

16. “ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்”

என்ற திருக்குறளின் பொருள் என்ன?

**விடை:**

# ஒழுக்கம் உயிரிலும் மேலானது

17. புலம் பெயர் தமிழர்கள் தமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக் காத்து வரும் இரண்டு முறைகளைக் கூறுக?

**<u>விடை:</u>**

**கலை கலாசார நிகழ்வுகள்**

**ஆலயங்கள்**

**(தமிழ்ப் பாடசாலைகள், தமிழ்க் கலைகளைக் குழந்தைகளுக்குக் கற்பித்தல்)**

18. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று”

என்ற பாடலை இயற்றியவர் யார்?

**விடை:**

# ஔவையார்

19. சூரியன் என்ற சொல்லின் ஒத்த சொல்?

1. சந்திரன்

2. ஆதவன்

3. நிலா

**<u>விடை:</u>**

**2. ஆதவன்**

20. தமிழ் அரச மொழியாக உள்ள நாடுகள் மூன்றின் பெயர்களைக் கூறுக?

**<u>விடை:</u>**

**இலங்கை**

**சிங்கப்பூர்**

**இந்தியா (மாநில அரசில்)**

21. பின்வரும் வசனத்தை முடிக்கவும்.

நான் நாளை பாடசாலைக்கு ___________

**<u>விடை:</u>**

**செல்வேன்**

**(போவேன் / போகமாட்டேன் / செல்லலாம் / …..)**

22. தமிழ்க் கலைகள் இரண்டைக் கூறுக?

__விடை:__

**நாட்டியம்,  கோலாட்டம்**

**(மயிலாட்டம்  /  நாடகம்  /  பேச்சு  / …..)**

23. திருக்குறளை இயற்றியவர் யார்?

**<u>விடை:</u>**

**வள்ளுவர்**

24. தமிழர் பண்பாடுகள் இரண்டினைக் கூறுக?

**விடை:**

தாய் தந்தையரைப் பேணுதல்

வந்தாரை வரவேற்று விருந்தோம்புதல்

(பிறருக்கு உதவுதல்

பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களை மதித்தல்)

25. இந்த இசைக் கருவியின் பெயர் என்ன?



**விடை:**

**பறை**